சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். ஓ.எஸ். 119/2017

2023 ம் ஆண்டு **16.10.2023** ம் தேதி நாகராஜ்

என்பவரின் சாட்சியாகிய வாசா 1 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற Grade II Bench Clerk திருமதி.எம்.தெய்வானை என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜ் | தாலூக்கா | பொள்ளாச்சி |
| க.பெ. (அ) த.பெ. | லேட்.திருமூர்த்தி | சமயம் | இந்து |
| கிராமம் | பொள்ளாச்சி | வயது | 45 |

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி. என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் தரப்பு ஆவணங்களாக

| | |
|---|---|
| 1.வசாஆ 1 – | 01.03.1983 தேதியிட்ட கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| 2.வசாஆ 2 – | 31.01.1996 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| 3.வசாஆ 3 – | 25.10.1999 தேதியிட்ட 2, 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தின் சான்று நகல் |
| 4 வசாஆ 4 – | 29.12.2014 தேதியிட்ட என் தகப்பனார் திருமூர்த்தியின் இறப்பு சான்றிதழ் அசல் |
| 5.வசாஆ 5 – | 07.08.1989 தேதியிட்ட என் தகப்பனார் திருமூர்த்தியின் வாரிசு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது) |
| 6.வசாஆ 6 – | 24.08.2016 தேதியிட்ட என் தாயாரின் இறப்புச் சான்றிதழ் அசல் |

7.வசாஆ 7 – 16.07.2013 தேதியிட்ட 4ம் பிரதிவாதியின் மனைவி சிவகாமி இறப்பு சான்றிதழ் புகைப்பட நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது)

8.வசாஆ 8 – 28.03.2014 தேதியிட்ட என் தகப்பனார் மற்றும் 24 பேர் பெயர்கள் தாக்கல் ஆகி உள்ள பட்டா வட்டாட்சியரால் வழங்கப்பட்டது அசல்

9.வசாஆ 9 – 17.05.2014 தேதியிட்ட என் தாயார் குப்பம்மாள் தமிழக முதல் அமைச்சருக்கு அனுப்பிய மனு இணையதள ஒப்புகை சீட்டு

10.வசாஆ 10 – 20.12.2014 தேதியிட்ட பொள்ளாச்சி வட்டாட்சியர், கோவை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கடிதம், என் தாயார் குப்பம்மாளுக்கு அனுப்பப்பட்ட நகல்

11.வசாஆ 11– தாவாச் சொத்திற்கான வில்லங்க சான்று அசல்

எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வாசாஆ 4, 5, 6, 7, 8 ஆவணங்கள் குறியீடு செய்ய பிரதிவாதி வழக்கறிஞரால் ஆட்சேபணை செய்யப்பட்டது.

## பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி